# G.C.E (A/L)

# 2019

## பொதுச் சாதாரணப் பரீட்சை

## General Knowledge

- ✍ நியாயிக்கும் திறன்கள்
- ✍ பிரச்சினை தீர்க்கும் திறன்கள்
- ✍ கிரகித்தலும் தொடர்பாடல் திறன்களும்




**தொகுப்பும் விரிவுரையும்**

H.D.Fasmin B.Sc (Hons)

## (12) பொதுச் சாதாரணப் பரீட்சை - வினாத்தாள் கட்டமைப்பு

### புதிய பாடத்திட்டம்

நேரம் : 02 மணித்தியாலங்கள்


ஐந்து தெரிவுகள் வீதம் 50 பல்தேர்வு வினாக்களை வினாத்தாள் கொண்டிருக்கும்.

| **உள்ளடக்கம்** | **வினா வகை வினாக்களின் எண்ணிக்கை** |
|---|---|
| பொது விடயங்கள் தொடர்பான அறிவு (நடைமுறை விவகாரங்கள்) | 10 |
| நியாயிக்கும் திறன்கள் (எண்களுக்குரிய, வெளிக்குரிய போன்ற...) | 10 |
| பிரச்சினை தீர்க்கும் திறன்கள் (அளவரி ரீதியான நியாயித்தல்) | 15 |
| கிரகித்தலும் தொடர்பாடல் திறன்களும் | 15 |
| **மொத்தம்** | **50** |

(1). இரு நேர்முழு எண்களின் கூட்டுத்தொகை 21ஆகும்.அவற்றின் பெருக்குத் தொகையாக அமையாதது
1. 80 2. 90 3. 98 4. 100 5. 104

(2). 5 மாணவர்களின் இடைத்திணிவு 32 kg ஆகும். இவர்களுடன் இன்னும் ஒரு மாணவன் இணைந்து கொண்டால் 6 மாணவர்களினதும் இடைத்திணிவு 31 kg ஆகும். எனின் புதிதாக இணைந்து கொண்ட மாணவனின் திணிவு எவ்வளவு?
1. 22 kg 2. 24 kg 3. 26 kg 4. 28 kg 5. 30 kg

(3). உருவில் காட்டப்பட்டுள்ளவாறு 20 வரிசைகளில் பந்துகள் அடுக்கப்பட்டால் அதில் காணப்படும் பந்துகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?




1. 220 2. 210 3. 200
4. 190 5. 180

(4). $5 + 3 \times 4 - 8 \div 2$ இன் பெறுமானம்?
1. 12 2. 13 3. 16 4. 20 5. 28

- **5 - 7 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலைப் பயன்படுத்துக.**

(5). கிராமமொன்றிலுள்ள 50 வீடுகளில் 20 வீடுகளில் காரும் 40 வீடுகளில் மோட்டார் சைக்கிளும் காணப்படுகின்றன. இவ்விரண்டும் காணப்படாத வீடுகளின் எண்ணிக்கை 06 ஆகும். ஏனின் இவை இரண்டும் காணப்படும் வீடுகளின் எண்ணிக்கை யாது?
1. 10 2. 12 3. 15 4. 16 5. 20

(6). மோட்டார் சைக்கிள் மாத்திரம் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது?
1. 26 2. 24 3. 32 4. 40 5. 44

(7). இக்கிராமத்தில் ஒரு வகை வாகனம் மாத்திரம் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 8 3. 18 4. 28 5. 30

(8). செவ்வகமொன்றின் நீளம் 8 cm உம் அதன் மூலைவிட்டமொன்றின் நீளம் 10 cm உம் ஆயின், அதன் சுற்றளவு யாது?
1. 14 cm 2. 18 cm 3. 24 cm 4. 28 cm 5. 30 cm

(9). 13, 10, 7, 4 ...... எனும் தொடரின் 15 ஆவது உறுப்பு யாது?
1. -18 2. -20 3. -29 4. -30 5. -35

- **10 - 12 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலைப் பயன்படுத்துக.**

A இன் வயது 50 அலும் அதிகம். B இன் வயது 50 இலும் கூடிய ஆனால் 55 இலும் குறைவு. C இன் வயது 60 இலும் அதிகம் ஆனால் 65 இலும் குறைவு. D இன் வயது 50 இலும் அதிகம் ஆனால் 60 இலும் குறைவு. B யை விட D வயதில் அதிகம் C ஐ விட A மூத்தவர். B ஐ விட E இளையவர்.

(10). வயதில் மூத்தவர்.

1. A 2. B 3. C 4. D 5. E

(11). வயதில் இளையவர்.

1. A 2. B 3. C 4. D 5. E

(12). இவர்களில் நடுவில் இருப்பவர்.

1. A 2. B 3. C 4. D 5. E

(13). ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு 6 மனிதர்களுக்கு 3 நாட்கள் எடுக்கின்றன. அதைப்போன்ற இரு மடங்கான வேலையை செய்வதற்கு 9 மனிதர்களிற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்.

1. 2 2. 4 3. 5 4. 6 5. 8

(14). சிறுவனொருவன் குறிப்பிட்ட ஒரு தூரத்தை 1km /h எனும் கதியில் சென்று 3km /h எனும் கதியில் திரும்பி வந்தடைந்தான். முழுப்பயணத்திற்கும் 2 மணித்தியாலங்கள் எடுத்தால் பயணத்தூரம் எவ்வளவு?

1. $1\frac{1}{2}km$ 2. $2\ km$ 3. $2\frac{1}{2}km$ 4. $3km$ 5. $3\frac{1}{2}km$

(15). ரூபா 240 ஐ அமல்,நிமல் மற்றும் சமன் ஆகியோரிற்கிடையே அமல், நிமல் ஆகிய இருவருக்கும் ரூபா 150, நிமல், சமன் ஆகிய இருவருக்கும் ரூபா 160 என்றவாறு ஆகும். சுமனிற்கு கிடைத்த பணம் எவ்வளவு?

1. ரூ. 65 2. ரூ. 70 3. ரூ. 75 4. ரூ. 80 5. ரூ. 90

(16). 6 கொய்யாப்பழங்களினதும் 3 மாம்பழங்களினதும் நிறைகள் 2 கொய்யாப்பழங்களினதும் 5 மாம்பழங்களினதும் நிறைக்குச் சமனாகும். கொய்யாப்பழமொன்றின் நிறை பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது.

1. மாம்பழமொன்றின் நிறையானது 2 கொய்யாப்பழங்களின் நிறைக்குச் சமனாகும்.
2. மாம்பழமொன்றின் நிறையானது 4 கொய்யாப்பழங்களின் நிறைக்குச் சமனாகும்.
3. கொய்யாப்பழமொன்றின் நிறை 2 மாம்பழங்களின் நிறைகளுக்குச் சமனாகும்.
4. மாம்பழமொன்றின் நிறையானது கொய்யாப்பழமொன்றின் நிறையின் ½ இற்குச் சமனாகும்.
5. கொய்யாப்பழமொன்றின் நிறை 4 மாம்பழங்களின் நிறைகளுக்குச் சமனாகும்.

(17). யூசுப் A எனும் இடத்திலிருந்து வடக்கு நோக்கி 100 m தூரம் சென்று அங்கிருந்து கிழக்கு நோக்கி 100m தூரம் சென்று அங்கிருந்து தெற்கு நோக்கி 200 m தூரம் சென்று B யை அடைந்தான். தற்போது அவன் நிற்பது A இலிருந்து எத்திசையிலாகும்?

1. வடக்கு 2. ஈசான திசை 3. மேற்கு 4. அக்கினி மூலை 5. வடமேல்

(18). உருவிலுள்ள கோலத்திற்கேற்ப A இன் பெறுமதி?

1. 32 2. 56 3. 72
4. 83 5. 94





(19). 4 தோடம்பழங்களினதும் 3 அப்பிள்களினதும் விலை ரூபா 220 ஆகும். 2 தோடம்பழங்களினதும் 3 அப்பிள்களினதும் விலை ரூபா 170 ஆயின், 3 தோடம்பழங்களினதும் 4 அப்பிள்களினதும் விலையைக் காண்க.


1. ரூ. 220 2. ரூ. 240 3. ரூ. 235 4. ரூ. 250 5. ரூ. 285

(20). ABCD ஓர் இணைகரம். தரப்பட்டுள்ள அளவுகளிற்கேற்ப AY இன் நீளம்?

1. 6 cm 2. 8 cm 3. 9 cm
4. 10 cm 5. 11 cm



(21). நிறுவனமொன்றில் மொழிப்பாடநெறியிற் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கைகள் பற்றிய தரவுகள் வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது. ஹிந்தி மொழியை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை 24 எனின், ஆங்கில மொழியை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?



1. 42 2. 64 3. 68 4. 72 5. 80

(22). $\sqrt{(21 \times 6 \times 14)}$ இன் பெறுமானம் யாது?

1. 14 2. 24 3. 42 4. 44 5. 48

(23). இங்கு தரப்பட்டுள்ள சதுரங்களினுல் 5 தொடக்கம் 13 வரையுள்ள எண்களை ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தி நிரல், நிரை, மூலைவிட்டம் வழியே உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமனாகுமாறு இலக்கமிடப்பட்டால் A + E + I இன் கூட்டுத்தொகை யாது?

| | | |
|---|---|---|
| A | B | C |
| D | E | F |
| G | H | I |

1. 18 2. 20 3. 25 4. 27 5. 29


(24). 2000 ஆம் ஆண்டு நிமலின் தந்தையின் வயது நிமலின் வயதிலும் மூன்று மடங்காகும். 2005 இல் நிமலின் தந்தை நிமலிலும் 30 வருடங்கள் கூடியவர். துந்தையின் வயது நிமலின் வயதின் இருமடங்காவது கீழுள்ள எவ்வருடத்திலாகும்.?

1. 2003 2. 2010 3. 2015 4. 2018 5. 2020

(25). $\dfrac{(0.1)^2 \times 0.01}{\sqrt{0.0001}}$ இன் பெறுமானம் யாது?


(1). 0.1 (2). 0.01 (3). 0.001 (4). 0.0001 (5). 1.0

(26).சதுரமொன்றானது உருவிலுள்ளவாறு சிறிய சதுரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. உருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?




1. 25 2. 35 3. 45 4. 55 5. 65

(27).




தரப்பட்டுள்ள சதுரமுகியை பிரிக்கும் போது பெறப்படும் உரு பின்வருவனவற்றுல் எது?



1 2 3 4 5


தரப்பட்டுள்ள உருவங்களில் ஒன்று ஏனையவற்றுடன் பொருந்தாது காணப்படுகின்றது. அவ்வுருவை தெரிவு செய்க.

(28).



1 2 3 4 5

(29).



1 2 3 4 5

30) அடுத்தடுத்து உள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத்தொகை 33 ஆகும். அம் மூன்று இலக்கங்களினதும் பெருக்கமாவது


1. 1290 2. 1300 3. 1310 4. 1320 5. 1330

31) ஒரு பக்க நீளம் $5cm$ ஆகவுள்ள சதுரமொன்று சமமான 25 சதுரங்களாக பிரிக்கப்பட்டது. எனின், தற்போது காணப்படுகின்ற சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 50 2. 55 3. 60 4. 65 5. 70

32) உலோகக்கம்பிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உருவொன்று கீழே தரப்பட்டுள்ளது. அது செங்கோண முக்கோண வடிவானதாகும். அதன் செம்பக்க நீளம் யாது?

1. 18cm
2. 16cm
3. 14cm
4. 10cm
5. 9cm




33) $P$ இன் தாய் Q ஆவார். P இன் கனவர் R ஆவதுடன் Q இன கனவர் S ஆவார். அதனடிப்படையில் R க்கும் S க்கும் இடையிலான உறவு என்ன?

1. S இன் தந்தை R ஆவார்.
2. S இன் சகோதரர் R ஆவார்.
3. S இன் மருமகன் R ஆவார்.
4. S இன் மாமா R ஆவார்.
5. S இன் மகன் R ஆவார்.

34) 1, 3, 5, 7. …. எனும் எண் கோலத்தில் முதல் 25 இலக்கங்களினதும் கூட்டுத்தொகை யாது?


1. 625 2. 675 3. 700 4. 725 5. 750

35) வாகனமொன்றுமுதல் 2 மணித்தியாலங்களில் குறிப்பிட்ட தூரத்தைமணித்தியாலமொன்றுக்கு 60km கதியிலும், எஞ்சிய தூரத்தை மணித்தியாலமொன்றுக்கு 50km கதியிலும் பயணித்தது. அவ்வாகனம் பயணித்த மொத்த தூரம் 270km ஆகும். எனின், பயணத்திற்கு எடுத்த காலம் எவ்வளவு?

1. 4 மணித்தியாலங்கள்
2. 4½ மணித்தியாலங்கள்
3. 5 மணித்தியாலங்கள்
4. 5¾ மணித்தியாலங்கள்
5. 5½ மணித்தியாலங்கள்

36) சுயதொழிலில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான தகவல்கள் அருகிலுள்ள வட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளது. மீன் வளர்ப்பில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கை 9 ஆகும்.எனின், ஓர்கிட் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை யாது?

1. 18 2. 20 3. 21
4. 23 5. 27




- **37 - 39 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலைப் பயன்படுத்துக.**

சுஜீவா நதீதாவை விட மூத்தவள் ஆவதுடன் அமாலிக்கும் இளையவள்.நிலுாகா நதீகாவை விட மூத்தவள் ஆவதுடன் சுஜீவாக்கு இளையவள். தயானி நதீகாவை விட இளையவள்.

37) இவர்களுல் மூத்தநபர் யார்?

1. நிலுாகா 2. சுஜீவா 3. அமாலி 4. தயானி 5. நதீகா

38) இவர்களுல் இளையவர் யார்?

1. நிலுாகா 2. சுஜீவா 3. அமாலி 4. தயானி 5. நதீகா

39) இவர்களுள் நடுவயதினை உடையவர் யார்?

1. நிலுாகா 2. சுஜீவா 3. அமாலி 4. தயானி 5. நதீகா

40) 100 இலும் குறைந்த முழு எண்ணொன்றை 3 இனாலும் 4 இனாலும் 5 இனாலும் வகுக்கும் போது 1 மீதமாகும். எனின், அவ் எண் யாது?
1. 91 2. 81 3. 71 4. 61 5. 51

- **41, 42 ஆகிய வினாக்களுக்கு கீழுள்ள எண்கோலத்தைப் பயன்படுத்துக.**

A – 2, 6, 14, 30, 62
B – 5, 9, 17, 35, 65
C – 3, 8, 13, 18, 23
D – 1, 4, 10, 22, 46
E – 4, 7, 13, 25, 49


41) ‘‘ஓவ்வொரு எண்கோலமும் 1 ஐக் கூட்டி 2 இனால் பெருக்கல்’’ எனும் நியமத்திற்கு அமைய உருவாக்கப்பட்டுள்ள எண்கோலங்கள் இரண்டும் எவை?
1. A,B 2. A,D 3. B,E 4. D,E 5. C,D

42) ‘‘ஓவ்வொரு எண்கோலமும் 2 இனால் பெருக்கி 1 ஐக் கழித்தல்’’ எனும் நியமத்திற்கு அமைய உருவாக்கப்பட்டுள்ள எண்கோலங்கள் இரண்டும் எவை?
1. A,B 2. A,D 3. B,E 4. D,E 5. C,D

43. சதாப்தம் எனப்படுவது
1. 10 ஆண்டுகளாகும். 2. 10-100 ஆண்டுகளாகும் 3. 100-ஆண்டுகளாகும்
4. 1000 ஆண்டுகளாகும் 5. 100-1000 ஆண்டுகளாகும்

- **44, 45, 46 மற்றும் 47 ஆகிய வினாக்களுக்கு அருகிலுள்ள உருவைப் பயன்படுத்துக.**

நிறுவனமொன்றில் பணிபுரியும் 7 சேவகர்களினால் பேசக்கூடிய மொழிகள் பற்றிய வரைபு காட்டப்பட்டுள்ளது. அதில் செவ்வகம் மூலம் சிங்கள மொழியும் முக்கோணம் மூலம் ஆங்கில மொழியும், சதுரம் மூலம் தமிழ் மொழியும் வட்டம் மூலம் ஜேர்மன் மொழியும் குறிக்கப்பட்டுள்ளது.




44. சிங்கள மொழி மாத்திரம் பேசக்கூடியவர் யார்?
1. A 2. B 3. C 4. D 5. G

45. மேற்படி நான்கு மொழிகளையும் பேசக்கூடியவர் யார்?
1. A 2. B 3. C 4. D 5. E

46. சிங்களம், ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் ஆகிய மொழிகளை பேசக்கூடிய எனினும் தமிழ் மொழியை பேச முடியாத நபர் யார்?
1. C 2. D 3. E 4. F 5. G

47. இரு மொழிகளை மாத்திரம் பேசக்கூடியவர் யார்?
1. A 2. B 3. C 4. D 5. E

- **48தொடக்கம் 51 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தரவினை பயன்படுத்துக**

ஒரு பக்க நீளம் 5cm ஆகவுள்ள சதுரமுகியொன்றின் 6 பக்கங்கள் மீதும் வெள்ளை நிறம் பூசப்பட்டு, பின்னர் அந்த சதுரமுகியானது ஒரு பக்க நீளம் 1cm ஆகவுள்ள சிறிய சதுரமுகிகளாக வெட்டி எடுக்கப்பட்டது.


48. வெள்ளை நிறம் பூசப்படாத சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?

49. எவையேனும் மூன்று பக்கங்கள் மீது மாத்திரம் வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?

50. எவையேனும் இரு பக்கங்கள் மீது மாத்திரம் வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ள சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை?

51. வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ள சதுரமுகிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

இச்சதுரமுகியின் மேல் மற்றும் கீழ் முகங்களுக்கு வெள்ளை நிறமும், ஏனைய நான்கு முகங்களுக்கும் சிவப்பு நிறமும் பூசப்பட்டு 64 சிறிய சதுரமுகிகளாக வெட்டப்பட்டுள்ளன.




52. இரு முகங்களுக்கு மாத்திரம் சிவப்பு நிறம் பூசப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

53. ஒரு பக்கத்திற்கு மாத்திரம் சிவப்பு நிறம் பூசப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?


54. ஒரு முகத்திற்கு மாத்திரம் வெள்ளை நிறம் பூசப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

55. ஒரு பக்கத்திற்கு வெள்ளை நிறமும், இரு பக்கங்களுக்கு சிவப்பு நிறமும் பூசப்பட்டுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?

56. தரப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப அடுத்துவரவேண்டிய உரு எது?




57. தரப்பட்டுள்ள உருவங்களில் ஒன்று ஏனையவற்றுடன் பொருந்தாது. அவ்வுரு எது?





அமல், பவன், காசிம், டேவிட் மற்றும் எமில் ஆகியோர் ஒருத்தருக்கு ஒருத்தர் வேறுபட்ட வயதையும் உயரத்தையும் உடைய 5 நண்பர்களாவர். அவர்களிடையே டேவிட் மூத்தவராவதுடன் அவன் அமல், பவன் ஆகிய இருவரையும் விட உயரமானவன். அமல், எமில் ஆகிய இருவரும் பவனை விட வயதில் குறைந்தவர்களாவதுடன் எமில் அமலை விட உயரமானவன். அத்துடன் காசிமை விட இருவர் உயரமாகவும் இருவர் கட்டையாகவும் உள்ளனர்.

58. இரண்டாவதாக வயதில் மூத்தவர் யார்?

59. ஆகவும் கட்டையானவர் வயதில் இளையவர் எனின், இரண்டாவது இளையவர் யார்?

60. ஆசிரியர்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோரிற்கிடையிலான தொடர்பை சரியாகக் காட்டும் உரு எது?



61. அவதானம்,முடிவுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப பொருந்தாத சோடியைத் தெரிவு செய்க.

| | அவதானம் | முடிவு |
|---|---|---|
| 1. | $x$ ஓர் இரட்டை எண் | $x+1$ ஓர் ஒற்றை எண் |
| 2. | $x$ மீற்றரில் அளக்கப்படும் | $x+1$ மீற்றரில் அளக்கப்படு |
| 3. | $x, y$ ஐ விட பெரிது | $x+1, y$ ஐ விட பெரிதாகும் |
| 4. | $x$ புதன்கிழமையாகும் | $x+1$ வியாழக்கிழமையாகும். |
| 5. | $x$ பூச்சியத்திற்கு சமனாகும் | $x+1$ ஆனது 1 இற்கு சமுனாகும். |

62. எப்போதும் உண்மையாகாத சோடியைத் தெரிவு செய்க.

| | அவதானம் | முடிவு |
|---|---|---|
| 1. | சதுரத்தின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும். | சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ ஆகும். |
| 2. | வட்டமானது சதுரத்தை விட பெரிதாவதுடன் சதுரமானது முக்கோணியை விட பெரிதாகும் | வட்டம் முக்கோணியை விட பெரிது. |
| 3. | சதுரமுகியொன்றின் கனவளவு $1cm^3$ ஆகும். | சதுரமுகியின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும். |
| 4. | செங்கோண முக்கோணியொன்றின் பக்கங்களின் நீளங்கள் முறையே 3cm , 4cm ஆகும். | முக்கோணியின் எஞ்சிய பக்கத்தின் நீளம் 5cm ஆகும். |
| 5. | சதுரமொன்றானது 1cm ஆரையுள்ள வட்டத்தினை உள்ளடக்குகின்றது. | சதுரத்தின் பரப்பளவானது $4cm^2$ இலும் குறையாது. |

63. CHAIR எனும் சொல்லை RIAHC எனக் குறிப்பிட்டால் WHOLE எனும் சொல்லை குறிப்பிடக்கூடிய முறை யாது?

64. LEVEL எனும் சொல்லை OHYHO எனக் குறிப்பிட்டால் DID எனும் சொல்லை குறிப்பிடக்கூடிய முறை யாது?

65. ELEPHANT எனும் சொல்லை DMDQGBMU எனக் குறிப்பிட்டால் MOUSE எனும் சொல்லை குறிப்பிடக்கூடிய முறை யாது?

66. BEAR எனும் சொல்லை CGDV எனக் குறிப்பிட்டால் HAT எனும் சொல்லை குறிப்பிடக்கூடிய முறை யாது?

67. WHERE எனும் சொல்லை SDANA எனக் குறிப்பிட்டால் NUT எனும் சொல்லை குறிப்பிடக்கூடிய முறை யாது?

68. ஓர் எண்ணை ஆறால் வகுக்கும் போது 5 மீதியாகும், ஐந்தால் வகுக்கும் போது 4 மீதியாகும். நான்கால் வகுக்கும் போது 3 மீதியாகும். மூன்றால் வகுக்கும் போது 2 மீதியாகும் எனின் அவ்வெண்ணாக இருக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது?

69. ஓர் எண்ணை ஆறால் வகுக்கும் போது 2 மீதியாகும், ஐந்தால் வகுக்கும் போதும் 2 மீதியாகும். நான்கால் வகுக்கும் போதும் 2 மீதியாகும். மூன்றால் வகுக்கும் போதும் 2 மீதியாகும் எனின் அவ்வெண்ணாக இருக்கத்தக்க மிகச்சிறிய எண் யாது?

70. வகுப்பொன்றிலுள்ள 40 மாணவர்களில் 20 மாணவர்கள் கணிதத்தினையும் 30 மாணவர்கள் தமிழினையும் விரும்புகின்றனர். 10 மாணவர்கள் இவ்விரண்டையும் விரும்புகின்றனர் எனின் இவ்விரண்டையும் விரும்பாதோர் எத்தனை பேர்?